1987 ஏப்ரல் 4]

மாண்புமிகு அமைச்சரவர்களை ஆளாக்கியதற்கு நன்றிக் கடனாகவும்—அவர்கள் நினைத்தால் புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே சொன்னால் மறுக்க மாட்டார்கள்—அருள்கூர்ந்து அவர்கள் சொல்லி அங்கே அண்ணா பண்ணையிலேயே ஒரு விவசாயக் கல்லூரி அமைக்க அமைச்சரவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அதற்கு ஒரேயொரு வழி, அந்தக் கல்லூரி எங்கே ஏற்பட்டாலும் அதற்கு அறிஞர் அண்ணா கல்லூரி என்று பெயர் வைத்துவிடுவதுதான்.

கல்லாற்றிலிருந்து மதுரைக்குக் குடிதண்ணீர்.

289—(* வினா எண் 11577) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரளாவின் கல்லாற்றில் இருந்து மதுரைக்குக் குடிதண்ணீர் பெற கேரள அரசை மாநில அரசு கோரியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இது குறித்து இரு மாநிலங்களின் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் பேசி, ஒரு உடன்பாட்டிற்கு வரலாம் என கேரள மாநில முதல்வருக்கு நமது முதலமைச்சர் அவர்கள் எழுதியதற்குக் கேரள மாநிலத்தின் முன்னாள் முதல் அமைச்சரிடமிருந்து பதில் வந்துள்ளது. இப்பொருள் அரசின் ஆய்வில் உள்ளது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரினுடைய குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தக் கல்லாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வருவதைத் தவிர வைகை பற்றிலிருந்து நீர் ஆதாரங்களைப் பெறுவதற்கு ஏதாவது திட்டம் இருக்கிறதா உலக வங்கியினுடைய உதவியுடன் அப்படியென்றால் அந்தத் திட்டத்தினுடைய மதிப்பீடு எவ்வளவு என்கின்ற விபரங்களை அறிய விரும்புகிறேன்.

1987 ஏப்ரல் 4]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கி உதவியோடு வைகை நதி நீர் ஆதாரத்தைக் கொண்டு, 32.51 கோடி செலவில் மதுரை நகருக்குக் குடிநீர் வழங்க ஒரு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் செயல் படுத்தப்பட்டு வருகிறது.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அந்த நகரிலே ஏற்பட்டிருக்கின்ற குடிதண்ணீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பதற்காக இரயிலிலே தண்ணீரைக் கொண்டு வந்து அங்கே குடிதண்ணீர் விநியோகிப் பதற்கு அரசு ஏதாவது முயற்சிகளை மேற்கொள்ளுமா என்கின்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இரயிலிலே தண்ணீர் கொண்டு வருகின்ற நிலைமை சென்னைக்கு ஒரு கால கட்டத்திலே இருந்தது. மதுரைக்கு அந்தக் காலகட்டம் என்றைக்கும் வரத் தேவையில்லை. ஏனென்றால் வைகை நதியிலே எங்கே கிணறு தோண்டினாலும் தண்ணீர் கிடைக்கும். அதோடு கல்லாற்றிலே இருந்து தண்ணீர் கொண்டு வருவதற்காக கேரள முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாகரன் அவர்களிடத்தில் நாங்கள் பேசியிருக்கிறோம். பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கின்றபொழுதே ஆட்சி அங்கே மாறியிருக்கிறது. கேரள முன்னாள் முதலமைச்சர் தருவதற்கு இயலாது என்று சொல்லியிருக்கிறார்கள். இருந்தாலும் இப்பொழுது வந்திருக்கின்ற புதிய அரசை கல்லாற்றிலிருந்து குடிக்க மட்டும் தண்ணீர் கேட்டு பெறுவதற்கு ஏற்பாடு செய்ய இந்த அரசு தொடர்ச்சியாக முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, இரயிலிலே தண்ணீர் வர வேண்டிய தேவை தற்போது எதுவுமில்லை.

திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரத்தில் உலக வங்கியின் மூலமாகக் கடன் பெற்று வைகை நதியின் மூலமாகத் தண்ணீர் கொண்டு வரப் போவதாகக் கூறினார்கள். அந்த வேலை எப்பொழுது ஆரம்பிக்கப்படும் என்பதை அமைச்சரவர்கள் அறிவிக்க முடியுமா?

[1987 ஏப்ரல் 4

(முற்பகல் 10-30)

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, உலக வங்கி உதவியுடன் தற்போது அந்த வேலை நடந்து கொண்டிருக்கிறது.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: தலைவரவர்களே, கேரள அரசோடு பேசி, கல்லாற்றிலிருந்து மதுரைக்குத் தண்ணீர் கொண்டுவர முயற்சி செய்வதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்திருப்பது போல காமராஜர் மாவட்டத்தில் விருதுநகர், சிவகாசி, ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற பகுதிகளுக்கு, கேரளத்திலிருந்து குடிநீர் கொண்டுவர ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, கல்லாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவர வேண்டுமென்றால் அந்த ஆறு கேரளத்தில்தான் இருக்கிறது; அதற்குத்தான் முயற்சி எடுக்கிறோம். முயற்சி வெற்றிபெற்றால் மதுரைக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேரளத்திலிருந்து காமராஜர் மாவட்டத்திற்குத் தண்ணீர் கொண்டுவர முயற்சி எடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். முதலிலே மதுரைக்குக் கிடைக்கட்டும்; பின்னால் காமராஜர் மாவட்டத்திற்குப் பார்க்கலாம்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

தமிழ்நாட்டில் கரும்பின் விலை.

290—(*வினா எண் 12609) **திரு. ஆர். தியாகராசன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 250 அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1986-87 ஆம் ஆண்டிற்கு மைய அரசு 8.5 சதவிகிதம் சர்க்கரை கட்டுமானமுள்ள கரும்புக்கு டன் ஒன்றிற்கு ரூ. 170 என விலை அறிவித்தது. விவசாயிகள் நலனைக் கருதி